# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 2433/ 11 - 2025 අප්‍රේල් මස 22 වැනි අඟහරුවාදා - 2025.04.22**

2433/11 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 22 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**மத்திய மாகாண மாகாண சபை**

**கண்டி மாநகர சபையின் பொழுதுபோக்கு வரி**

1984 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க பொழுதுபோக்கு வரி (திருத்தம்) சட்டத்தால் திருத்தப்பட்ட 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க ( 267 வது அதிகாரம்) 1946 ஆம் ஆண்டின் பிரிவு 2 இன் துணைப்பிரிவு (1) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி, 16.08.2023 அன்று நடைபெற்ற கண்டி மாநகர சபை முகாமைத்துவக் குழுவின் 2023/408 தீர்மானத்தின் கீழ் என்னால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. கண்டி மாநகர சபையின் 01.10.2024 அன்று நடைபெற்ற முகாமைத்துவக் குழுவின் 2024/1544 தீர்மானத்தின் கீழ், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி இலக்கம் 2384/33 மற்றும் 17.05.2024 ஆந் திகதியிட்ட அறிவித்தல் அங்கீகரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. இதன்படி, மேற்படி தீர்மானத்தின்படி இங்குள்ள அட்டவணை, 1989 இல் திருத்தப்பட்ட பிரிவு 2 (1) (அ) உடன் வாசிக்கப்பட வேண்டிய பொழுதுபோக்கு வரி கட்டளைச் சட்டத்தின் துணைப்பிரிவு 2 (2) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி மத்திய மாகாண ஆளுநர் சரத் பீ. எஸ். அபயகோன் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டது. மாகாண சபையின் (துணை ஏற்பாடுகள்) சட்டம் இலக்கம் 12 மேற்படி உப பிரிவுக்கு இணங்க இதன் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

**சரத் பீ. எஸ். அபயகோன்,**
மத்திய மாகாண ஆளுநர்.

மத்திய மாகாண ஆளுநர் அலுவலகம்,
2025, மாச்சு 18.

**தீர்மானம்**

கண்டி மாநகர சபை அதிகார வரம்பில் பொழுதுபோக்கு வரி அறவிடுவதற்கான 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பொழுதுபோக்கு வரி கட்டளைச் சட்டம் மற்றும் 1984 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க பொழுதுபோக்கு வரி திருத்தச் சட்டத்தின் பிரிவு 2 (1) இன் படி, பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்காக அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி 01.01.2025 அன்றிலிருந்து பணம் அறவிடப்படும் ஒவ்வொரு நுழைவுச் சீட்டின் முகமதிப்பின் பிரகாரம் பொழுதுபோக்கு வரி அறவிடுவதற்கு 1947 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் மூலம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்பதை இதன் மூலம் அறிவிக்கிறேன்.

இந்த சதவீதம், பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்கான பொழுதுபோக்கு வரியின் சதவீதமாக கருதப்படும் என்றும் இது தொடர்பாக மறு உத்தரவு பிறப்பிக்கும் வரை பணம் அறவிடப்படும் என்றும் இதன் மூலம் மேலும் அறிவிக்கின்றேன்.

**அட்டவணை**

| *தொடர் இல.* | *பொழுதுபோக்கு நடவடிக்கையின் தன்மை* | *பொழுதுபோக்கு வரியின் விகிதம்* |
|---|---|---|
| 1 | * திரைப்படக் காட்சிகள் | 15% |
| 2 | * வெளிநாட்டு கலைஞர்கள் பங்கேற்கும் அனைத்து இசைக் கச்சேரிகளும் | 15% |
| 3 | * அனைத்து திருவிழாக்கள் மற்றும் சர்க்கஸ் நடவடிக்கைகள்<br>* மேஜிக் நடவடிக்கைகள், ப்ரீக் ஷோக்கள் மற்றும் வினோத போட்டிகள் | 15% |
| 4 | * வணிக நோக்கங்களுக்காக நடத்தப்படும் உள்ளூர் கலைஞர்கள் சம்பந்தப்பட்ட அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் | 15% |
| 5 | * சர்வதேச விளையாட்டுப் போட்டிகள்<br>* தேசிய/உள்ளூர் விளையாட்டுப் போட்டிகள் (பாடசாலை விளையாட்டு தவிர) | 15% |
| 6 | * முதன்மையாக செயலில் உள்ள கலைஞர்கள் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கச்சேரிகள்<br>* தற்போது பிரபல கலைஞர்கள் தங்கள் வாழ்வின் சிறப்பு நிகழ்வாக நடத்தி வரும் இசை நிகழ்ச்சிகள் | 15% |
| 7 | * பொதுநலச் சங்கங்கள், மாணவர் சங்கங்கள் போன்றவை மற்றும் அத்தகைய சங்கங்கள் மற்றும் சமூக அமைப்புகளால் நடத்தப்படும் கச்சேரிகள்<br>* விண்ணப்பதாரி அதிபராக உள்ள வலயக் கல்விப் பணிப்பாளரின் அங்கீகாரத்துடன் பாடசாலை நலன்புரி சங்கத்தால் நடத்தப்படும் கச்சேரிகள்.<br>* பாடசாலையின் சார்பாக பாடசாலை அல்லது முன்னாள் மாணவர் சங்கம் அல்லது கல்லூரி சங்கம் நடத்தும் விளையாட்டு போட்டிகள் மற்றும் பாடசாலை விளையாட்டு சங்கங்கள் நடத்தும் போட்டிகள்<br>* மானவர்களின் நலனுக்காக உயர்கல்வி நிறுவனத்தின் மாணவர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் மற்றும் வருவாயை உயர்த்தும் நோக்கத்தில் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்ச்சிகள்.<br>* உள்ளூர் நாடகங்களின் பாடல்களுடன் கூடிய கச்சேரிகள்<br>* மலையக கலாச்சார நடன நிகழ்ச்சிகள் | 10% |
| 8 | * உள்ளூர் கைவினைஞர்களைக் கொண்ட உணவு வழங்கப்படாத நேரடி DJ நிகழ்ச்சிகள், நடன நிகழ்ச்சிகள், தனியாகப் பாடுதல் மற்றும் பிற நடன நிகழ்ச்சிகள்<br>* இரவு சாப்பாட்டின் பின்னரான நடனம்/ பாடல்<br>(உணவு மற்றும் பானத்துடன் விலை) | 15% |

EOG 04-0153

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.